# சைவமும் சைவ சித்தாந்தமும்

சிவம் என்பது அன்பு என்று பொருள்படும். சிவனை முழு முதற்கடவுளாக வழிபடுவோர் சைவர்கள். அவர்களது சமயம் சைவ சமயம், சிவனை, 'அழல் வண்ணன்', 'தீவண்ணன்', 'செந்தழலோன்' என்றெல்லாம் குறிப்பிடுவர். தீவண்ணனாகக் கடவுளைக் குறிப்பிடும் மரபை விவிலியத்தில் காணலாம். தம் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளைப் பாலைவனத்தில் மோசே முனிவர் மேய்த்துக் கொண்டிருந்த போது, கடவுள் அவருக்கு ஒரு முட்செடியில் நெருப்பு வடிவில் காட்சியளித்து அவரோடு பேசினார். (யாத். 3:1-4). எகிப்து நாட்டில் இசுரவேல் மக்கள் அடிமைகளாயிருந்தார்கள். அந்நாட்டிலிருந்து விடுதலைப் பயணமாக மோசே முனிவர் அம்மக்களை வழி நடத்தினார். அப்போது, கடவுள் அவர்களுக்கு வழிகாட்டியாகச் சென்றார். பகலில் மேகத் தூண் வடிவிலும், இரவில் நெருப்புத் தூண் (யாத். 13:21-22) வடிவிலும் வழிநடத்தியதாகத் திருமறை கூறுகிறது.

சைவம், தென்னாட்டுச சமயம் எனவும் தமிழர் சமயம் எனவும் உரிமை பாராட்டப்படுகிறது. எல்லா நாட்டவர்க்கும் கடவுளாக விளங்குபவர், தென்னாட்டில் சிவன் என்று போற்றப்படுகிறார் என்பதை மாணிக்க வாசகர்,

"தென்னாடுடைய சிவனே போற்றி !
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !"

என்று வாழ்த்துகிறார்.

தமிழகத்தில் தோமாவின நற்செய்தியின் பயனாகத் திருக்குறளும் தொடர்ந்து பக்தி இயக்கமும் தோன்றலாயின. சைவ சமயத்தின் வழிபாடு, பழைய ஏற்பாட்டின் விரிவாகவும், சைவ சித்தாத்தத்தின் அடிப்படை புதிய ஏற்பாட்டின் சாரமாகவும் விளங்குகின்றன.

## சைவத் திருமுறைகளும் சாத்திரங்களும்

சைவ சமய இலக்கியங்களைத் தோத்திரங்கள் என்றும் சாத்திரங்கள் என்றும் இருவகைப்படுத்துவர். சிவனைப் போற்றிப் பாடும் புகழ்ப் பாடல்கள், தோத்திரங்கள் என்றும், இப்பாடல்களின் பிழிவாக விளங்கும் இறையியல் கோட்பாடு நூல்களைச் சாத்திரங்கள் என்றும் குறிப்பிடுவர். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலிய பெரியோர் பாடிய பாடல்களைப் பின்னர்த் தொகுத்து வகைப்படுத்தி, அவற்றுக்குத் திருமுறைகள் எனப்பெயரிட்டனர். சைவத் திருமுறைகள் பன்னிரண்டு ஆகும். திருமுறைகளை மையமாக வைத்தச் சாத்திர நூல்கள் தோன்றின. சைவ சித்தாந்த சாத்திரங்கள் என இவற்றுக்குப் பெயர் சூட்டினர். இவை மொத்தம் பதினான்கு நூல்கள் ஆகும். இவற்றை எழுதிய ஆசிரியர்கள் கி.பி.12ஆம், கி.பி. 14ஆம் நூற்றாண்டுகட்கு இடைப்பட்ட காலங்களில் வாழ்ந்தோர் ஆவர்.

சித்தாந்தம் என்பதற்கு, முடிந்த முடிபு என்பது பொருள் ஆகும். வேதாந்தத்தில் விளக்கப் பெறாத அல்லது விளக்கமுறாப் பகுதிகள் சைவ சித்தாந்தத்தில் விளக்க முறுகின்றன. எனவே தான், வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந்தம் என்று மொழிந்தனர்.

## அவதாரக் கோட்பாடு

சைவ சித்தாந்தத்தில் அவதாரக் கோட்பாடு இல்லை எனக் கருதுபவர் பலர் உளர். அவதாரக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டதுதான் சைவ சித்தாந்தம் என்பதை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. இதில் முதலாவது சாத்திரம் 'திருவுந்தியார்' என்னும் நூல் ஆகும்.

"அகளமாய் யாரும் அறிவரிதப் பொருள்
சகளமாய் வந்ததென்று உந்தீபற
தானாகத் தந்ததென்று உந்தீபற"

என்று இந்நூலின் முதற்பாடல். அகளம் = அறிய முடியாதது. சகளம் = அறியக் கூடியது. 'யாராலும் அறிய இயலாத பரம்பொருளாகிய கடவுள் நாம் எல்லாராலும் அறியத்தக்கவராக வந்தார்; அவர் தம்மையே தந்தார் ; எனவே மகிழ்ந்து கூத்தாடு' என்று மேற்குறித்த பாடலின் பொருள். கடவுள், மனிதனாக வந்த அவதாரத்தை இது விளக்குகிறது.

'சகல'ரை மீட்பதற்காகக் கடவுள் மனித உருவத்தில் அவதாரம் கொள்கிறார். அவர்களை மீட்டு, சாவமையாகிய நீடுவாழ்வைத் தருகிறார் என்பது சித்தாந்தம். இதனைக் கீழ்வரும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

"இறவாத இன்பத்து எமை இருத்த வேண்டிப்
பிறவா முதல்வன் பிறந்து"

எனப் 'போற்றி பஃறொடை' என்னும் சைவ சித்தாந்தம் பேசுகிறது. நாமெல்லாரும் இறவாத நீடு வாழ்வாகிய இன்பத்தைப் பெற்று மகிழ்ந்திருக்க, பிறவியெடுக்காத கடவுள், பிறந்து மனிதனானார் என்பது இதன் கருத்து.

கடவுள் மனிதனாகப் பிறந்ததைச் சைவம், குருவாக வந்ததாகக் கூறுகிறது. குருவாக வந்து ஆன்மாக்களுக்கு அவர் உபதேசம் செய்ததைக் கல்லால மரத்தின் கீழ் தட்சிணா மூர்த்தியாக அமர்ந்து உபதேசித்ததாகப் புராணத்தில் விளக்கப்படுகிறது. எனவே, சைவ சித்தாந்தத்தின் அடிப்படை அவதாரக் கோட்பாடு என்பது விளங்கும்.

## மூவொருமைக் கோட்பாடு

கடவுள் ஒருவரே ; ஆனால் மூன்று நிலைகளில் செயல்படுகிறார் ; மூன்று கடவுளர் அல்லர். அவர் ஒருவரே என்பது மூவொருமைக் கோட்பாடு ஆகும். கிறித்தவம் தான் மூவொருமைக் கோட்பாட்டை உலகுக்குத் தந்தது. கிறித்துவுக்குப் பின்னுள்ள சமயங்களில் இக்கோட்பாடு இடம் பெறுமாயின் அது கிறித்தவம் அச்சமயத்திற்கு அளித்த கொடை எனலாம்.

சைவம் மூவொருமைக் கோட்பாட்டுச சமயம் ஆகும். அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்று நிலைகளைப் பதி (கடவுள்) இலக்கணமாகச் சைவ சமயம் கூறுகிறது. ஆகாயம் (பரவெளி அம்பலம்) அருவ நிலையையும், நடராச உருவம் உருவ நிலையையும், இலிங்கம் அருவுருவ நிலையையும் விளக்குகிறதென்பவர். இந்நிலைகள் கிறத்தவத்தை விளக்கும் மூன்று நிலைகள் ஆகும்.

| கடவுளின் மூன்று நிலைகள் | சைவம் | கிறித்தவம் |
|---|---|---|
| அருவம் (Formless) | ஆகாயம் | தந்தை (God the Father) |
| உருவம் (With Form) | நடராசர் | மகன் (God the Son) |
| அருவுருவம் (Semi - Form) | இலிங்கம் | தூய ஆவி (God the Holy Spirit) |

கடவுள் எங்கும் பரந்திருப்பது போல ஆகாயம் பரந்து விரிந்துள்ளதால், இது கடவுளின் பரத்துவ (Para) நிலையைக் குறிக்கிறது; உருவத்தோடு கூடியவர் நடராசர்; உருவில் வந்த நிலையைக் (அபரம்) குறிக்கிறது.

இலிங்கம் என்பது குறி (symbol); அது உருவம், அருவம் ஆகிய இரண்டும் இணைந்த அருவுருவ நிலையைக் குறிக்கிறது. இது சைவம் காட்டும் மூவொருமை ஆகும்.

### நினைவுக்கல் வழிபாடு (Memorial Stone Worship)

உலகப் பெருஞ்சமயங்களில் நினைவுக்கல் வழிபாடு சிறப்பிடம் வகிக்கிறது. 'பெயர்செபா' என்னும் இடத்திலிருந்து புறப்பட்டு ஆரானை நோக்கி வழிநடத்திச் சென்ற போது, இரவில் ஓரிடத்தில் தங்கிய யாக்கோபுக்கு ஏற்பட்ட அனுபவம் ஆதியாகமம் 28ஆம் அதிகாரத்தில் விளக்கப்படுகிறது. தன் தலைக்கு அணையாக வைத்துப்படுத்திருந்த கல்லை, நினைவுத் தூணாக நிறுத்தியதையும் அதன்மேல் எண்ணெய், பானபலி முதலியன வார்த்துக் கடவுளை வணங்கியதையும் அப்பகுதியால் அறிகிறோம். (ஆதி. 28:16-22; 35:14)

தாம் நினைவுக் கல்லாக நாட்டிய தூணையே கோயிலாக அவர் கண்டார். பெத்+ஏல்=பெத்தேல். பெத் = வீடு ; ஏல் = கடவுள் ; கடவுளின் வீடு = கோயில். அந்நினைவுக் கல்லுக்குத் தம் வருவாயில் பத்தில் ஒரு பங்கைக் காணிக்கையாகச் செலுத்துவதாகவும் நேர்ந்து கொண்டார் (ஆதி. 28:220). இங்ஙனம் நினைவுக்கல் நாட்டிக் கடவுளை வணங்கிக் கொள்வதை இசுரயேலர் வரலாற்றில் நாம் பிற்காலங்களிலும் காணுகிறோம் (யோசுவா 24:26 ; 1சாமு. 7:12; ஆதி. 28; 11-22; 31:44-53; 31:13; 35:14). இவ்வாறு நாட்டப்பட்ட நினைவுத் தூண்கள், கடவுளுக்கும் தமக்கும் சான்றாக விளங்குகின்றன என இசுரயேலர் நம்பினர்.

தமிழகத்தின் மிகப் பெரிய கோயிலாகக் கருதப்படும் தில்லையிலுள்ள கனக சபையின் கோயிலமைப்பு, யாக்கோபு தொடங்கி வைத்த கோயில் வழிபாட்டின் விரிவே என்பது கா. சுப்பிரமணிய பிள்ளையின் கருத்து (தமிழர் சமயம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. 1972, ப. 32).

இந்நினைவுக்கல் வழிபாடே இலிங்க வழிபாடாக இன்றும் சைவ சமயத்தில் திகழ்கிறது. அருவ நிலையும் உருவ நிலையும் கலந்து அவருவுருவ நிலையை விளக்குவதாகச் சிவலிங்கம் விளங்குகிறது. சிவன் கோயில்களில் கருவறையில் சிவலிங்கம் அமையப் பெற்றுள்ளது.

பெத்தேலில் யாக்கோபு நினைவுக்கல் நாட்டிய இடத்தில் எரோபெயாம் என்னும் அரசன், மக்கள் வழிபடும்படியாகக் கன்றுக்குட்டியை அமைத்தான் (1 அரசர் 12:28-33). அங்கே பலிபீடம் ஒன்றையும் அமைத்துக் கடவுளைத் தொழுது கொண்டான். பலிபீடம், கன்றுக்குட்டி, சிவலிங்கம் (நினைவுத் தூண்) - இந்த அமைப்பே இன்றும் சிவன் கோயில் அமைப்பாக விளங்குகிறது. எனவே, விவிலிய வழிபாட்டின் விரிவே சைவ சமயம் என்பது தெளிவாகிறது.

பழைய ஏற்பாட்டில் யாக்கோபு நாட்டிய கல் உயிரற்ற கல். இந்தக் கல் புதிய ஏற்பாட்டில் உயிருள்ள கல்லாகிய இயேசு கிறிஸ்துவைக் குறிக்கிறது. (1 பேதுரு 2:4-8). கல்லின் மேல் யாக்கோபு எண்ணெய் வார்த்தது தூய ஆவியாரின் பொழிவைக் குறிக்கிறது. இனி, சைவ சித்தாந்தம், விவிலியத்தின் தொடர்ச்சியாகிய இயேசு கிறிஸ்துவின் மீட்பின் செய்தியை எங்ஙனம் விளக்குகிறதெனப் பார்ப்போம்.

### உலகப் படைப்பு

விவிலியத்தின முதல் மூன்று அதிகாரங்களில் உலகப் படைப்பு விளக்கப்படுகிறது. முதல் மாந்தனாகிய ஆதாம், அவன் மனைவி ஏவாள், இந்த உலகம் ஆகிய மூன்றையும் கடவுள் மூன்று விதமான செயல்திறனால் படைத்தார். இவ்வுலகை அவர் படைத்த முறை வேறு. தமது வார்த்தையினாலே உலகத்தையும் அவற்றிலுள்ள உயிருள்ளவை, உயிரற்றவை அனைத்தையும் படைத்தார். முதல் ஐந்து நாள் படைப்பு நிகழ்ச்சிகளாக இவை

விளக்கப்படுகின்றன. அதன் பிறகு கடவுள் ஆதாம் என்ற முதல் மாந்தனை உருவாக்கினார். மண்ணிலிருந்து அவனைச் சமைத்து, அவன் நாசியில் தம் உயிர்மூச்சை ஊதினார் ; மனிதன் உயிர் பெற்றவனானான். எனவே, ஆதாமைக் கடவுள் படைத்த விதம் வேறு வகையான செயலால் நடந்தது. அடுத்து, ஏவாளைக் கடவுள் மற்றொரு வகையான செயல் முறையில் உருவாக்கினார். ஆதாமின் உடலிலுள்ள விலா எலும்பை எடுத்து, அதிலிருந்து ஏவாள் என்னும் பெண்ணை உருவாக்கினார். இம்மூன்று வகைகளில் கடவுளின் படைப்புத் தொழில் நடந்தது. இதனைச் சிவஞான போதம்.

> "அவனவள் அதுவெனும் அவைமூ வினைமையின்
> தோற்றிய திதியே ஒடுங்கிமலத் துளதாம்
> அந்தம் ஆதி என்மனார் புலவர்" – சிவஞானபோதம், 1

என விளக்கிக் காட்டுகிறது.

அவன் – ஆதாம் ; அவள் – ஏவாள் ; அது – உலகம். கடவுளின் மூன்று வேறுபட்ட வினைகளால் தோற்றுவிக்கப்பட்ட ஆண், பெண், உலகம் ஆகிய மூன்றும் ஒடுங்கிப் பாவநிலைக்குட்பட்டது ; இதுவே கடவுளின் பரிசுத்தப் படைப்பின் இறுதியாகும். இந்த இறுதியே, உலகில் பாவம் தொடங்கியதன் தொடக்கமுமாகும் – என்பது மேற்குறித்த அடிகளின் விளக்கமாகும்.

## முதற் பாவம்

கடவுள் தூயாதி தூயவர் ஆவார். அவர் படைத்தவை அனைத்தும் தூயவையாக இருக்கும் என்பது தானே முறை ? அவ்வாறிருக்க, அவை எங்ஙனம் மாசுக்குட்பட்டன ? பரிசுத்தத்தில் எங்ஙனம் அசுத்தம் சேர்ந்தது ? என்னும் கேள்விகள் எழுவன இயல்பு.

கடவுள் படைப்பில் முதலில் சேர்ந்த மலம், முதல் மாந்தனைப் பற்றிக் கொண்டதோடு நின்று விடாமல், அவன் வழிப் பிறந்த மாந்த இனம் அனைத்தையுமே பற்றிக் கொண்டது. பிறப்பு வழி வரும் தீமையாகிய பாவத்தைச் சைவ சித்தாந்தம் சகஜமலம் என்று குறிப்பிடுகிறது.

சக + ஜ + மலம் ---> சக = உடன் ;
ஜ = பிறந்த ;
மலம் = பாவம்.

இதனைக் கிறித்தவம் "ஆதிப் பழி", "ஆதம் பாவம்" என்று குறிப்பிடுகிறது. ஆதாமின் வழி வந்த பாவம் அவரது சந்ததியார் அனைவரையுமே பற்றிக் கொண்டது. இந்த ஆதிப்பழியிலிருந்து மாந்த இனம் விடுதலை பெற வேண்டுமானால், கடவுளே இறங்கி வந்து விடுவித்தால் தான் அது கிட்டும் என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது.

> "முத்தி முதற்கொடிக்கே மோகக் கொடிபடர்ந்து
> அத்தி பழுத்தது அருளென்னுஞ் – கத்தியினால்
> மோகக் கொடியறுக்க முத்திப் பழம் பழுக்கும்
> ஏகக் கொடியெழுங்காண் இன்று"

எனத் திருக்களிற்றுப்படியார் (93) என்னும் நூல் கூறுகிறது. "முத்தி முதல் கொடியில் மோகமாகிய கொடி படர்ந்து அத்திப் பழம் பழுத்தது ; மோகக் கொடியை அருள் என்னும் கத்தி அறுக்க, முத்திப்பழம் பழுக்கும் ; ஏகக் கொடியே எழுந்தருளி இதனைச் செய்யும்" எனப் பொருள் தரும் இப்பாடலின் விளக்கமோ வரலாறோ சைவ சித்தாந்தத்தில் குறிப்பிடப்படவில்லை.

இதன் வரலாற்றை விவிலியத்தில் தான் காண முடியும். முத்தி முதற்கொடி என்பது ஆதாம் ஆகிய முதல் மாந்தன் ; மோகக் கொடி என்பது பாவம் ; ஆதாமின் மீறுதல். இதனால் விளைந்தது பாவமாகிய மரணம் ; மோகக் கொடியை, ஏகக் கொடியாகிய இறைவன் அருளாகிய கத்தி (இயேசு)யால் அறுப்பதனால் மறுபடியும் முத்திப்பழம் பழுக்கும் என்பதே விவிலிய அடிப்படையில் பொருந்துவதாகும்.

### கடவுள் குருவாக வருதல்

படைப்பின் அடிப்படையில் சைவ சித்தாந்தம், பதி, பசு, பாசம் என்னும் மூன்றையும் முப்பொருள் அநாதி என்று குறிப்பிடுகிறது. பதி – கடவுள் ; பசு – ஆன்மா ; பாசம் – மலம் இவை மூன்றுமே அநாதியானவை. விவிலியத்தின் அடிப்படையில் கடவுள், மாந்தன், பாவம் இம்மூன்றுமே அநாதியானவை.

ஆதாமின் வழி வந்த சகசமலத்தை வேரோடு களைந்திடக் கடவுளே மாந்தனாக அவதாரமெடுத்து உலகிற்கு வந்தார். இதனைச் சைவ சித்தாந்தம் குருவாகக் கடவுள் வந்தார் என்று குறிப்பிடுகிறது. சைவ சித்தாந்தத்தின் அடிப்படை நூலாகிய சிவஞான போதம் இதனை விளக்குகிறது.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த விட்டு
அன்னியம் இன்மையின் அரன்கழல் செலுமே"

– சிவஞான போதம், 8

'ஐம்புலன் நுகர்வுகளாகிய வேடர் கையில் அகப்பட்டு, ஆன்மா தன்னையும் உணராமல் தன் தலைவனாகிய கடவுளையும் உணராமல் அயர்ந்து விட்ட நிலையில், கடவுள் குருவாக வந்து சிலுவையாகிய தவத்தின் மூலம் அவனுக்கு உணர்த்தி, மாந்தரை மீட்டுக் கொண்டார்,' என்பது மேற்குறித்த சூத்திரத்தின் பொருள் ஆகும்.

### தவம் - சிலுவைத் தவம்

பாவத்தில் மாந்தன் வீழ்ந்ததால், கேவலமாக இழிநிலைக்கு அவன் தள்ளப்பட்டான். தனக்கும் கடவுளுக்கும் இருந்த உறவு அறுந்து விட்டது. கடவுள் மாந்தனாக வந்து, சிலுவைத் தவத்தின் மூலம் அவனை மீட்டார். அவன் கடவுளின் பிள்ளை என்று உணர்த்தினார். அறுந்து போன உறவு புதுப்பிக்கப்பட்டது.

தவம் என்பதற்குத் "தன்னுயிர் தானறப் பெறுதல்" என்று திருக்குறள் (268) விளக்கம் கூறுகிறது. திருவுந்தியார் என்னும் சித்தாந்த நூலும்,

"மூலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியாரென் றுந்தீபற
தவத்தில் தலைவரென் றுந்தீபற"

– திருவுந்தியார், 45

என்று குறிப்பிடுகிறது. பாவஞ் செய்து இழிநிலையிலிருந்த மாந்தரைத் தம் சிலுவைத் தவத்தினால் முற்றத்தில் கொணர்ந்து நிறுத்தினார் ; அவரே பெரியவர் ; தவத்தில் தலைவர்.

இறைவனின் தவம், அவரது சாவு ஆகும். முதலாம் மாந்தன் வழி வந்தவை பாவம், மரணம் முதலியன. இறைவன் மக்களின் பாவங்களுக்காகக் கொலையுண்டு, பலியானதால் பாவநீக்கம், மரண நீக்கம் முதலியன மக்களினத்திற்குக் கிடைத்தன. அவர் ஒரே தரம் இறந்தார். மறுபடி அவர் மாந்தனாக இவ்வுலகிற்கு

வரப் போவதுமில்லை ; அவர்களுக்காக இறக்கப் போவதுமில்லை. இதனைச் சைவ சித்தாந்தம் கீழக் காணுமாறு பாடுகிறது.

"கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்
பிண்டத்தில் வாராரென் றுந்தீபற
பிறப்பிறப் பில்லையென் றுந்தீபற"

– திருவுந்தியார், 3

கண்டம் = சாவு ; கருமம் = செயல் ---> மீட்பின் செயல்.

கடவுள் மாந்தனாக வந்து பலியாகி விட்டதால் இனிமேல் பலி செலுத்தத் தேவையில்லை என்னும் கோட்பாட்டைக் கிறித்தவ சமயம்தான் உலகிற்கு முதன் முதலில் கொடுத்தது. எனவே, இக்கோட்பாட்டுக்குப் பலி நிறைவேற்றக் கோட்பாடு என்று பெயர். இதனைச் சைவ சித்தாந்தம் இறப்பில் தவம் (சிவஞான போதம் – உதாரண வெண்பா, 46) என்று குறிப்பிடுகிறது.

**மீட்பு**

இறைவனின் சிலுவைத் தவத்தால் மக்களுக்கு மீட்பாகிய செல்வம் கிட்டுகிறது. தன்னுடைய முயற்சியினால் மட்டும் ஒருவருககு மீட்புக்கிட்டாது. இறைவனுடைய அருள் அவருக்குத் தேவை. இதனை இயேசு பெருமான்,

"என்னை அனுப்பிய தந்தை ஈர்த்தாலொழிய எவனும்
என்னிடம் வர இயலாது – யோ. 6:44"

என்று கூறினார். இதே கருத்தினை மாணிக்கவாசகர்,

'அவனருளாலே அவன் தாள் வணங்கி' எனப்பாடுகிறார். இறைவனுடைய பாதங்களை வணங்க விரும்பினாலும், அவரது அவள் கிட்டினால் மட்டுமே அவரை வணங்க இயலும் என்பது பொருள். திருவள்ளுவர் இக்கருத்தினை,

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது" (குறள், 377)

எனக்கு குறிப்பிடுகிறார்.

வகுத்தான் – உலகை வகுத்த கடவுள்
கோடி தொகுத்தவர் – கோடிக் கணக்கில் செல்வம்,
பொருள் முதலியவற்றைத் தொகுத்து வத்திருப்பவர்,
வகுத்த வகை – கடவுள் வகுத்த வகையாகிய அருள்
துய்த்தல் – அனுபவித்தல்
அரிது – இயலாது

கடவுளின் அருளில்லாமல் இறைவனை உணரவும், அவரது மீட்பைப் பெறவும் இயலாது. இம்மீட்பினை மக்களுக்குக் கொடுத்து அவர்களை மீட்டுக் கொள்பவர் அருட்சக்தி எனப்படும் தூய ஆவியார் ஆவார். (Holy Spirit)

இறைவனால் மீட்கப்பட்டோர் தனிக் கூட்டமாக அமைவர். இதனைத் திருக்கூட்டம் என்று சித்தாந்தம் பேசுகிறது. இக் கூட்டத்தைச் 'சான்றோர்' என்று திருக்குறள் குறிக்கிறது. இதனை விளக்குவதாகச் சிவஞான போத நூற்பா அமைந்துள்ளது.

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரனெனத் தொழுமே"

– சிவஞான போதம், 12

சிலுவை மரத்தில் தவம் செய்த கால்கள் குருதியால் நனைந்துள்ளதால் அவை செம்மலர் போல் தோற்றமளிக்கின்றன. நோன்பு = தவம் ; தாள் = கால் ---> நோன்றாள். இறைவனோடு சேரவிடாமல் தடுத்த பாவமானது, தவம் செய்யும் இறைவனின் குருதியால் கழுவப்பட்டது. இங்ஙனம் கழுவப்பட்ட அன்பர்களின் திருக்கூட்டம் – திருச்சபை ஆகும். இவர்களிடையே இருந்த அறியாமையாகிய மயக்கம் (மால்) நீங்கியதால், நேயமாகிய அன்பு மலிந்து, உள்ளமே ஆலயம் ; அதனுள் வாழும் கடவுளே அரன் (சிவன் = அன்பன்) எனத் தொழுது வணங்கும் நிலை உருவாகும்.

## முத்தி

இறைவன் படைத்த ஆன்மா இறைவனோடு மகிழ்ந்திருந்தது. ஆன்மா பாவத்தில் வீழ்ந்தபோது அறியாமை தன் ஆன்மாவை மறைத்ததால், தன்னையும் கடவுளையும் அறியமுடியாமல் ஆன்மா உழன்றது. எனவே, கடவுள் குருவாக இவ்வுலகில் தோன்றி, ஆணவ மலத்தை நீக்கித் திரும்பவும் ஆன்மாவை முத்தி நிலைக்குச் சேர்த்தார். தம்மையே பலியாக ஈந்தமையால் பாவ விடுதலையும் ஆன்ம ஈடேற்றமும் ஆன்மாவிற்குக் கிட்டியது. இதுவே சைவ சித்தாந்தம் கூறும் முத்தி நிலை. விவிலியம் விளக்குகின்ற முத்தி நெறியும் சைவம் விளக்குகின்ற முத்தி நெறியும் ஒன்றே என்பது இதன் வழி விளக்கமுறுகின்றது.

சைவ சமயத்தின் தொடக்கத்திற்கு திருவிவிலியத்தின் பழைய ஏற்பாட்டின் பகுதி வித்திட்டுள்ளது. சைவ சித்தாந்தம் இயேசு கிறித்துவின் அவதாரத்தையும் அவரின் தவமாகிய பலியையும் அவர் அருளும் மீட்பு, முத்தி ஆகிய அருட்பெரும் செல்வங்களையும் விளக்குகின்றன என்பது வெள்ளிடை மலை.